உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# திருவருள்மிகு கௌரியம்பாள் உடனாய திருக்கேதீச்சரப் பெருமான் திருக்கோயில்

திருக்கேதீச்சரம், மன்னார், இலங்கை.

## மஹா கும்பாபிஷேக விழா மலர்

நாள் :
ஸ்ரீ சுபகிருது வருடம், ஆனி 22-ஆம் நாள்
06-07-2022, புதன்கிழமை



அருள்மிகு கௌரியம்பாள் உடனாய திருக்கேதீச்சரப் பெருமான்

# போற்றிப் பஃறொடைகள்

(தத்புருஷ தேசிகரவர்கள் அருளியது)

நூற்றாண்டு கண்ட நூல் தொகுப்பாளர் :
''வில்வத் தொண்டர்'' சாரமா முனிவர்
அருள்மிகு தாயுமானசுவாமி திருக்கோயில்
தமிழ்நாடு, திருச்சிராப்பள்ளி–620 002.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"வில்வத் தொண்டர்" சாரமா முனிவர்

ஸ்ரீ சுபகிருது வருடம், சித்திரை 24-ஆம் நாள்
07-06-2022, சனிக்கிழமை

# 100-வது அகவை தினநாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

## திருவருள்மிகு கௌரியம்பாள் உடனாய
## திருக்கேதீச்சரப் பெருமான்
## திருக்கோயில்

# மஹா கும்பாபிஷேக விழா மலர்

## போற்றிப் பஃறொடைகள்

(தத்புருஷ தேசிகரவர்கள் அருளியது)



நூற்றாண்டு கண்ட நூல் தொகுப்பாளர் :

''வில்வத் தொண்டர்'' **சாரமா முனிவர்**

அருள்மிகு தாயுமானசுவாமி திருக்கோயில்

தமிழ்நாடு, திருச்சிராப்பள்ளி - 620 002.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| 1. | ஈழநாட்டு திருத்தலம் திருக்கேதீச்சரம் திருக்கோயில் வரலாறு | 3 |
| 2. | திருக்கேதீச்சரம் (2-ஆம் திருமுறை) | 5 |
| 3. | திருக்கேதீச்சரம் (7-ஆம் திருமுறை) | 8 |
| 4. | திருக்கோணமலை (3-ஆம் திருமுறை) | 10 |
| | **போற்றிப் பஃறொடைகள்** | |
| 5. | முன்னுரை | 13 |
| 6. | விநாயகர் போற்றிப் பஃறொடை | 14 |
| 7. | சிவபெருமான் போற்றிப் பஃறொடை | 18 |
| 8. | அம்மை போற்றிப் பஃறொடை | 22 |
| 9. | முருகப் பெருமான் போற்றிப் பஃறொடை | 26 |
| 10. | தோத்திரங்கள் | 30 |
| 11. | சிவநாமாவளி | 34 |
| 12. | வாழ்த்தொலி - மகுடம் | 35 |
| 13. | சண்டேசுரர் துதி | 36 |

### நால்வர் துதி

சைவத்தின்மேல் சமயம் வேறில்லை அதிர்சார் சிவமாம்
தெய்வத்தின்மேல் தெய்வம்இல் எனும் நான்மறை செம்பொருள் வாய்மை
வைத்த சீர்திருத்தேவாரமும் திருவாசகமும்
உய்வைத்தரச் செய்த நால்வர் பொற்றாள் எம்முயிர் துணையே.

### சேக்கிழார் துதி

தில்லைவா ழந்தணரே முதலாகச் சீர்படைத்த
தொல்லையதாந் திருத்தொண்டத் தொகையடியார் பதம் போற்றி
ஒல்லையவர் புராணகதை உலகறிய விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழார் அடிபோற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழநாட்டு திருக்கேதீச்சரம் திருக்கோயில் வரலாறு

கௌரியம்பாள் உடனுறை திருக்கேதீஸ்வரர் : திருக்கேதீச்சரம் அல்லது திருக்கேதீசுவரம் இலங்கையின் மேற்குக் கடற்கரைப் பகுதியிலுள்ள ஒரு சிவன் கோயிலாகும். இது மன்னார் மாவட்டத்திலுள்ள சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த துறைமுக நகரமான மாதோட்டத்தில் அமைந்துள்ளது. திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரும், சுந்தரமூர்த்தி நாயனாரும் இத்தலத்தின் மீது பதிகம் பாடியுள்ளார்கள். தேவாரப் பாடல் பெற்ற ஈழ நாட்டுத் தலங்களில் ஒன்றாகும்.

கேது வழிபட்ட தலமாதலால் திருக்கேதிச்சரமாயிற்றென ஆய்வாளர்கள் கூறுகின்றனர்மேற்கோள் தேவை. இக்கோயில் மாதோட்டம் நகரில் அமைந்துள்ளது. சூரபதுமனின் மனையாளின் பேரனார் துவட்டா. துவட்டாபிள்ளைப் பேறின்றித் திருக்கேதீச் சரத்தில் உள்ள பாலாவித் தீர்த்தத்தில் நீராடிக் கேதீச்சரத்தானை வழிபட்டமையால் திருவருள் கைகூடிப் பிள்ளைப் பேறு பெற்றார். பின் இத்தலத்தில்வாழத் தலைப்பட்டு அவ்விடத்தைப் பெருநகராக்கினார். துவட்டாவில் உருவாகியமையால் துவட்டா வெனவும் காலப்போக்கில் பெருநகரமாய் திகழ்ந்தமையால் மாதுவட்டாவெனவும் வழங்கிவந்தது.

இத்தலத்தில் அமைந்துள்ள பாலாவித் தீர்த்தத்தில் நீராடி இறுதிக்கடன் புரிவோர்க்கு புண்ணியம் கிட்டுமெனவும், இத்தீர்த்தத்தில் நீராடுவோர்க்குப் பிரமகத்தி போன்ற பாவங்கள் தீருமென்பதும் ஐதீகம்.

இந்நாட்டுப் பழங்குடியினராய நாகர்களது முக்கிய வழிபாட்டுத் தலமாதலால் இத்திருக்கோயிலிற்கு நாகநாதர் எனவும் பெயர் வழங்கி வந்துள்ளது. சோழ, பாண்டிய மன்னர்கள் பல திருப்பணிகளை இத்திருக்கோயிலிற்காற்றிய பெருமையும், வன்னி, யாழ்ப்பாண அரசர்கள் நித்திய நைமித்தியங்கள் இடையறாது செய்த பெருமையுங் கொண்ட திருத்தலம் இதுவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அருள்மிகு திருநாவுக்கரசு சுவாமிகள் அவர்களின் திருதாண்டகத்திலும், சேக்கிழார் பெருமானின் பெரிய புராணத்திலும் இத்திருத்தலம் சுட்டப்பட்டிருக்கிறது.

இத்திருத்தலத்தை அண்டிய பகுதிகளில் பல சிவாலயங் களிருந்தமையை அகழ்வாய்வுத் தரவுகள் மூலமறிய முடிகின்றது. அன்றியும் இத்திருவிடம் உலகப் புகழ்பெற்ற பெருநகரமாகவும் பல்துறைத் தொழில் வல்லவர்கள் வாழ்ந்த நகரமாகவும் சிற்பம் கலை நுணுக்கம் நிறைந்த ஆற்றல் மிக்க கலைஞர்களைக் கொண்டு திகழ்ந்த அழகு நகரமாகவும் மிளிர்ந்ததாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். மேற்கோள் தேவை.

பத்தாம், பதிரோராம் நூற்றாண்டில் இக்கோயில் சோழ மன்னர்களால் இராசராசேஸ்வர மாகாதேவன் கோயிலென அழைக்கப்பட்டது.

வரலாற்று ரீதியாக இலங்கையின் நான்கு திசைகளிலும் நான்கு ஈச்சரங்கள் இருந்து இலங்கையைக் காவல் காத்ததாகக் கூறப்படும் நான்கு ஈச்சரங்கள்.

பாலாவி ஒரு வளமிக்க ஆறாக இருந்தபோது, மல்வத்து ஓயாவின் நீர்ப்பெருக்கும், மற்ற இயற்கையான நீரோட்டங்களும் அதில்தான் கலந்தன. பாலாவியாற்றை மழைகாலத்தில்மட்டும் நீர்ப்பெருக்குள்ள மணற்படுகையாக ஆக்கியது. அகலமான பாலாவியின் கழிமுகம் மணல்மேடாகுவது விரைவாக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெய்வச் சேக்கிழார் அருளிய திருத்தொண்டர்புராணம்

வேதநெறி தழைத்(து)ஓங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்(து)அழுத
சீதவள வயல்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

## திருக்கேதீச்சரம்

*2-ஆம் திருமுறை* *திருச்சிற்றம்பலம்* *பண் :நட்டராகம்*

விருது குன்றமா மேருவில்
நாணர வாஅனல் எரிஅம்பாப்
பொருது மூவெயில் செற்றவன்
பற்றிநின் றுறைபதி யெந்நாளும்
கருது கின்றவூர் கனைகடற்
கடிகமழ் பொழிலணி மாதோட்டம்
கருத நின்றகே தீச்சரங் கைதொழக்
கடுவினை யடையாவே. 1

பாடல் வீணையர் பலபல
சரிதையர் எருதுகைத் தருநட்டம்
ஆடல் பேணுவர் அமரர்கள்
வேண்டநஞ் சுண்டிருள் கண்டத்தர்
ஈட மாவது விருங்கடற்
கரையினில் எழில்திகழ் மாதோட்டம்
கேடி லாதகே தீச்சரந் தொழுதெழக்
கெடுமிடர் வினைதானே. 2

பெண்ணொர் பாகத்தர் பிறைதவழ்
சடையினர் அறைகழல் சிலம்பார்க்கச்
சுண்ண மாதரித் தாடுவர்
பாடுவர் அகந்தொறும் இடுபிச்சைக்
குண்ண லாவதோர் இச்சையி
னுழல்பவர் உயர்தரு மாதோட்டத்
தண்ணல் நண்ணுகே தீச்சரம்
அடைபவர்க் கருவினை யடையாவே. 3

பொடிகொள் மேனியர் புலியத
ளரையினர் விரிதரு கரத்தேந்தும்
வடிகொள் மூவிலை வேலினர்
நூலினர் மறிகடல் மாதோட்டத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடிக ளாதரித் திருந்தகே
தீச்சரம் பரிந்தசிந் தையராகி
முடிகள் சாய்த்தடி பேணவல்
லார்தம்மேல் மொய்த்தெழும் வினைபோமே. 4

நல்ல ராற்றவும் ஞானநன்
குடையர் தம்மடைந்தவர்க் கருளீய
வல்லர் பார்மிசை வான்பிறப் பிறப்பிலர்
மலிகடல் மாதோட்டத்
தெல்லை யில்புக ழெந்தைகே
தீச்சரம் இராப்பகல் நினைந்தேத்தி
அல்லல் ஆசறுத் தரனடி
யிணைதொழும் அன்பராம் அடியாரே. 5

பேழை வார்சடைப் பெருந்திரு
மகள்தனைப் பொருந்தவைத் தொருபாகம்
மாழை யங்கயற் கண்ணிபா
லருளிய பொருளினர் குடிவாழ்க்கை
வாழை யம்பொழின் மந்திகள்
களிப்புற மருவிய மாதோட்டக்
கேழல் வெண்மருப் பணிந்தநீள்
மார்பர்கே தீச்சரம் பிரியாரே. 6

பண்டு நால்வருக் கறமுரைத்
தருளிப்பல் லுலகினில் உயிர்வாழ்க்கை
கண்ட நாதனார் கடலிடங்
கைதொழக் காதலித் துறைகோயில்
வண்டு பண்செயு மாமலர்ப்
பொழின்மஞ்ஞை நடமிடு மாதோட்டம்
தொண்டர் நாடொறுந் துதிசெய
வருள்செய்கே தீச்சர மதுதானே. 7

தென்னி லங்கையர் குலபதி
மலைநலிந் தெடுத்தவன் முடிதிண்தோள்
தன்ன லங்கெட அடர்த்தவற்
கருள்செய்த தலைவனார் கடல்வாயப்
பொன்னி லங்கிய முத்துமா
மணிகளும் பொருந்திய மாதோட்டத்
துன்னி யன்பொடு அடியவ
ரிறைஞ்சுகே தீச்சரத் துள்ளாரே. 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவு ளானுமப் பொருகடல்
வண்ணனும் புவியிடந் தெழுந்தோடி
மேவி நாடிநின் அடியிணை
காண்கிலா வித்தக மென்னாகும்
மாவும் பூகமுங் கதலியும்
நெருங்குமா தோட்டநன் னகர்மன்னித்
தேவி தன்னொடுந் திருந்துகே
தீச்சரத் திருந்தஎம் பெருமானே. 9

புத்த ராய்ச்சில புனைதுகி
லுடையவர் புறனுரைச் சமணாதர்
எத்த ராகிநின் றுண்பவ
ரியம்பிய ஏழைமை கேளேன்மின்
மத்த யானையை மறுகிட
வுரிசெய்து போர்த்தவர் மாதோட்டத்
தத்தர் மன்னுபா லாவியின்
கரையிற்கே தீச்சரம் அடைமின்னே. 10

மாடெ லாமண முரசெனக்
கடலின தொலிகவர் மாதோட்டத்
தாட லேறுடை யண்ணல்
கேதீச்சரத் தடிகளை யணிகாழி
நாடு ளார்க்கிறை ஞானசம் பந்தன்
சொல் நவின்றெழு பாமாலைப்
பாட லாயின பாடுமின்
பத்தர்கள் பரகதி பெறலாமே. 11

*திருச்சிற்றம்பலம்*

## தெய்வச் சேக்கிழார்

அந்நகரில் அமர்ந்(து)அங்கண் இனிது மேவி
ஆழிபுடை சூழ்ந்(து)ஒலிக்கும் ஈழம் தன்னில்
மன்னுதிருக் கோணமலை மகிழ்ந்த செங்கண்
மழவிடையார் தமைப்போற்றி வணங்கிப் பாடிச்
சென்னிமதி புனைமாட மாதோட் டத்தில்
திருக்கேதீச் சரத்துஅண்ணல் செய்ய பாதம்
உன்னிமிகப் பணிந்(து)ஏத்தி அன்ப ரோடும்
உலவாத கிழிபெற்றார் உவகை உற்றார். (12-890)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தெய்வச் சேக்கிழார் அருளிய திருத்தொண்டர்புராணம்**

மலர்மிசை அயனும் மாலும் காணுதற்கு அரிய வள்ளல்
பலர்புகழ் வெண்ணெய் நல்லூர் **ஆவணப் பழைமை காட்டி**
உலகுஉய்ய ஆண்டு கொள்ளப் **பெற்றவர் பாதம் உன்னித்**
**தலைமிசை வைத்து வாழும் தலைமைநம் தலைமை ஆகும்.**

## திருக்கேதீச்சரம்

*7-ஆம் திருமுறை* *திருச்சிற்றம்பலம்* *பண் :நட்டபாடை*

நத்தார்படை ஞானன்பசு வேறிந்நனை கவுள்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்திருக் கேதீச்சரத் தானே. 1

சுடுவார்பொடி நீறுந்நல துண்டப்பிறை கீளும்
கடமார்களி யானையுரி யணிந்தகறைக் கண்டன்
படவேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
திடமாஉறை கின்றான்திருக் கேதீச்சரத் தானே. 2

அங்கம்மொழி யன்னாரவர் அமரர்தொழு தேத்த
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பங்கஞ்செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேல்
செங்கண்ணர வசைத்தான்திருக் கேதீச்சரத் தானே. 3

கரியகறைக் கண்டன்நல கண்மேல்ஒரு கண்ணான்
வரியசிறை வண்டியாழ்செயும் மாதோட்டநன் னகருள்
பரியதிரை யெறியாவரு பாலாவியின் கரைமேல்
தெரியும்மறை வல்லான்திருக் கேதீச்சரத் தானே. 4

அங்கத்துறு நோய்கள்ளடி யார்மேலொழித் தருளி
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பங்கஞ்செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம்பொழில் சூழ்ந்ததிருக் கேதீச்சரத் தானே. 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெய்யவினை யாயவ்வடி யார்மேலொழித் தருளி
வையம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பையேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
செய்யசடை முடியான்திருக் கேதீச்சரத் தானே. 6

ஊனத்துறு நோய்கள்ளடி யார்மேலொழித் தருளி
வானத்துறு மலியுங்கடல் மாதோட்டநன் னகரில்
பானத்துறு மொழியாளொடு பாலாவியின் கரைமேல்
ஏனத்தெயி றணிந்தான்திருக் கேதீச்சரத் தானே. 7

அட்டன்னழ காகவ்வரை தன்மேலர வார்த்து
மட்டுண்டுவண் டாலும்பொழில் மாதோட்டநன் னகரில்
பட்டவ்வரி நுதலாளொடு பாலாவியின் கரைமேல்
சிட்டன்நமை யாள்வான்திருக் கேதீச்சரத் தானே. 8

மூவரென இருவரென முக்கண்ணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும்பொழில் மாதோட்டநன் னகரில்
பாவம்வினை யறுப்பார்பயில் பாலாவியின் கரைமேல்
தேவன்எனை ஆள்வான்திருக் கேதீச்சரத் தானே. 9

கரையார்கடல் சூழ்ந்தகழி மாதோட்டநன் னகருள்
சிறையார்பொழில் வண்டியாழ்செயுங் கேதீச்சரத் தானை
மறையார்புகழ் ஊரன்னடித் தொண்டன்னுரை செய்த
குறையாத்தமிழ் பத்துஞ்சொலக் கூடாகொடு வினையே. 10

*திருச்சிற்றம்பலம்*

## தெய்வச் சேக்கிழார்

மன்னும்இரா மேச்சரத்து மாமணியை முன்வணங்கிப்
பன்னுதமிழ்த் தொடைசாத்திப் பயில்கின்றார் பாம்புஅணிந்த
சென்னியர்மா தோட்டத்துத் திருக்கேதீச் சரம்சார்ந்த
சொன்மலர்மா லைகள்சாத்தித் தூரத்தே தொழுதுஅமர்ந்தார்.

(12-7-109)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தெய்வச் சேக்கிழார் அருளிய திருத்தொண்டர்புராணம்**

சிவன்அடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவம்அதனை அறமாற்றும் பாங்கினில்ஓங் கியஞானம்
உவமைஇலாக் கலைஞானம் உணர்வுஅரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாம்உணர்ந்தார் அந்நிலையில்.

## திருக்கோணமலை

*3-ஆம் திருமுறை* *திருச்சிற்றம்பலம்* *பண் :புறநீர்மை*

நிரைகழ லரவஞ் சிலம்பொலி
யலம்பும் நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப்
புணர்ந்த வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற்
பிளவு மளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகட லோத நித்திலங்
கொழிக்குங் கோணமா மலையமர்ந் தாரே. 1

கடிதென வந்த கரிதனை யுரித்து
அவ்வுரி மேனிமேற் போர்ப்பர்
பிடியன நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுத லவளொடு முடனாய்க்
கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து
கொள்ளமு னித்திலஞ் சுமந்து
குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றுங்
கோணமா மலையமர்ந் தாரே. 2

பனித்திளந் திங்கட் பைந்தலை நாகம்
படர்சடை முடியிடை வைத்தார்
கனித்திளந் துவர்வாய்க் காரிகை பாக
மாகமுன் கலந்தவர் மதின்மேல்
தனித்தபே ருருவ விழித்தழ னாகந்
தாங்கிய மேருவெஞ் சிலையாக்
குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே. 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழித்திளங் கங்கை சடையிடை வைத்துப்
பாங்குடை மதனனைப் பொடியா
விழித்தவன் தேவி வேண்டமுன் கொடுத்த
விமலனார் கமலமார் பாதர்
தெழித்துமுன் னரற்றுஞ் செழுங்கடற் றரளஞ்
செம்பொனு மிப்பியுஞ் சுமந்து
கொழித்துவன் றிரைகள் கரையிடைச் சேர்க்குங்
கோணமா மலையமர்ந் தாரே. 4

தாயினு நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பா னீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே. 5

பரிந்துநன் மனத்தால் வழிபடுமாணி
தன்னுயிர் மேல்வரும் கூற்றைத்
திரிந்திடா வண்ண முதைத்தவற் கருளுஞ்
செம்மையார் நம்மையா ளுடையார்
விரிந்துயர் மௌவன் மாதவி புன்னை
வேங்கைவண் செருந்திசெண் பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்
சூழ் கோணமா மலையமர்ந் தாரே. 6

............................கிடைக்கப்பெறவில்லை. 7

எடுத்தவன் றருக்கை யிழித்தவர் விரலா
லேத்திட வாத்தமாம் பேறு
தொடுத்தவர் செல்வந் தோன்றிய பிறப்பு
மிறப்பறி யாதவர் வேள்வி
தடுத்தவர் வனப்பால் வைத்ததோர்
கருணை தன்னருட் பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர் விரும்பும் பெரும்புகழாளர்
கோணமா மலையமர்ந் தாரே. 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருவரா தொருகை வெண்டலையேந்தி
யகந்தொறும் பலியுடன் புக்க
பெருவரா யுறையு நீர்மையர் சீர்மைப்
பெருங்கடல் வண்ணனும் பிரமன்
இருவரு மறியா வண்ணமொள் ளெரியா
யுயர்ந்தவர் பெயர்ந்தநன் மாற்கும்
குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக்
கோணமா மலையமர்ந் தாரே. 9

நின்றுணுஞ் சமணுமிருந்துணுந் தேரு
நெறியலா தனபுறங் கூற
வென்றுநஞ் சுண்ணும் பரிசின ரொருபான்
மெல்லிய லொடுமுட னாகித்
துன்றுமொண் பெளவ மவ்வலுஞ் சூழ்ந்து
தாழ்ந்துறு திரைபல மோதிக்
குன்றுமொண் கானல் வாசம்வந் துலவுங்
கோணமா மலையமர்ந் தாரே. 10

குற்றமி லாதார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரைக்
கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான்
கருத்துடை ஞானசம் பந்தன்
உற்றசெந் தமிழார் மாலையீ ரைந்து
முரைப்பவர் கேட்பவ ருயர்ந்தோர்
சுற்றமு மாகித் தொல்வினை யடையார்
தோன்றுவர் வானிடைப் பொலிந்தே. 11

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# போற்றிப் பஃறொடைகள்

## முன்னுரை

**"கைகாள் கூப்பித் தொழீர் கடி - மாமலர் தூவி நின்று - பைவாய்ப் பாம்பரை ஆர்த்த பரமனைக் - கைகாள் கூப்பித் தொழீர்"** என்பது அப்பரடிகள் திருவாக்கு. சிவபூசைக்கு இன்றியமை யாதவை பூவும் நீருமாம். இவைகளை மந்திர பூர்வமாக இறைவனுக்கு ஆக்குதல் வேண்டும். அந்த மந்திரங்களைச் சிவாகமங்களும், சிவபூசைப் பத்ததிகளும் அறிவிக்கின்றன.

மலரிட்டு வணங்குவதற்குப் புராண அடிப்படையிலுள்ள நாமங்களை, நம! என்னும் அந்தத்துடன், **"சோடசம், அஷ்டோத்தர சதம், திரிசதி, சகஸ்ரம்"** ஆகிய எண்ணிக்கைகளில் வடமொழியில் அமைந்திருப்பனவற்றைக் கோயில்களில் கையாண்டு வருகிறார்கள். இது **'அர்ச்சனை'** என்று வழங்கப் பெறுகிறது. இதனைத் தமிழில் செய்ய வேண்டுமென்பது, இப்போது பலரது விருப்பம். இதற்காகத் தமிழில் பல அர்ச்சனைப் புத்தகங்கள் வெளிவந்துள்ளன. அவற்றில் சில, சைவ மரபுக்கு மாறுபட்ட நாமங்களைக் கொண்டவை.

இவ்வெளியிட்டில், விநாயகர் சிவபெருமான், அம்மையார், முருகப்பெருமான் ஆகிய நால்வருக்கும் **"போற்றிப் பஃறொடைகள்"** என்னும் தமிழ்ப் பிரபந்த முறையில் ஒவ்வொன்றிலும் நூற்றெட்டு வரிகள் அமைந்த - சைவ மரபுக்கேற்ற அர்ச்சனைப் பாடல்கள் உள்ளன. இதைத் தோத்திரமாகவும் அர்ச்சனைக்கும் அன்பர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்



## விநாயகர் போற்றிப் பஃறொடை

திருச்சிற்றம்பலம்

அகர உயிரென அமர்ந்தனை போற்றி
ஆதியும் அந்தமும் ஆவாய் போற்றி
இன்பமே என்னுடை அன்பே போற்றி
ஈறும் முதலும் இல்லாய் போற்றி
உற்றவர்க் குதவும் உத்தம போற்றி

ஊர்பேர் இலாத ஒருவ போற்றி
எண்ணெழுத் தாக இலங்குவாய் போற்றி
ஏறுயர்த் தோன்தரும் ஏந்தால் போற்றி
ஐங்கரங் கொண்ட ஐயா போற்றி
ஒப்புயர் விகந்த உத்தம போற்றி.

ஓங்கா ரத்தின் உருவே போற்றி
ஔவைக் கருளும் அண்ணா போற்றி
பஃறொடை விரும்பும் பரமா போற்றி
செக்கர் மேனிச் செல்வா போற்றி
கங்கை மைந்த கணபதி போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நச்சினார்க் கினிய நாயக போற்றி
குஞ்சர முகத்துக் கோவே போற்றி
அட்ட மங்கலம் அருள்வாய் போற்றி
நண்ணினர்க் கருளும் நாதா போற்றி
சத்தொடு சித்தெனச் சார்ந்தாய் போற்றி

மந்திரப் பொருளென வயங்குவாய் போற்றி
துப்பெனு மேனிச் சுடரே போற்றி
அம்மையும் அப்பனும் ஆயினை போற்றி
மெய்யடி யாருளம் மேவுவாய் போற்றி
சர்ப்பா பரணம் தாங்குவாய் போற்றி.

சொல்பொருள் ஆகத் துலங்குவாய் போற்றி
அவ்வுடன் உவ்மவ் ஆவாய் போற்றி
ஏழ்தலம் பரவும் இறைவா போற்றி
உள்ளுவார் உள்ளத் துறைவாய் போற்றி
கற்றவர் விழுங்கும் கனியே போற்றி

என்னையும் ஆண்டருள் ஈசா போற்றி
கற்பக விநாயகக் கடவுள் போற்றி
காவிரி நதிதரும் கற்பகம் போற்றி
கிளிமொழி வல்லபை கேள்வ போற்றி
கீதம் இசைப்பவர் காதல போற்றி

குற்றம் பொறுத்தருள் கோவே போற்றி
கூரிய அங்குசம் கொண்டாய் போற்றி
கெடுமதி தாக்கா தடுபவ போற்றி
கேவலம் தொட்டுக் காவல போற்றி
கைகுவிப் போரைக் காப்பாய் போற்றி

கொங்கண முனிமனக் குறியே போற்றி
கோரக்கர் உவக்கும் கோவே போற்றி
கௌரிசேய் ஆகிய கண்ணே போற்றி
சகத்திர நாமச் சாமி போற்றி
சார்ந்தவர்ப் புரக்கும் தயாநிதி போற்றி.

சிந்துர மேனிச் செல்வா போற்றி
சீதரன் பரவும் சீல போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகபலை வெண்பூச் சூடுவாய் போற்றி
சூல பாணியின் தோன்றால் போற்றி
செல்வம் வழங்கும் திருவே போற்றி.

சேவையை ஏற்றருள் செய்வாய் போற்றி
சைவர் வணங்குமெய்த் தெய்வம் போற்றி
சொற்றுணை வேதிய சுந்தர போற்றி
சோபனம் அருளும் சோதி போற்றி
சௌசம் வழங்கும் சங்கர போற்றி.

ஞான பரனே நாயக போற்றி
ஞேயர் காணும் நீதி போற்றி
தத்துவம் கடந்த தனிமுதல் போற்றி
தானே தனக்குத் தலைவா போற்றி
திருகற் சிந்தையைத் திருத்துவாய் போற்றி.

தீவினை தீர்க்கும் தேவே போற்றி
துதிக்கைக் கருளும் துதிக்கை போற்றி
தூய மேனிச் சுடரே போற்றி
தெய்வ நாயகத் திருவே போற்றி
தேவர்கள் பரவும் செல்வா போற்றி

தைரியம் வழங்கும் சயம்பு போற்றி
தொந்தம் தொலைத்தருள் தூயோய் போற்றி
தோன்றாத் துணையாம் ஆன்றோய் போற்றி
நன்மை வழங்கும் நாதா போற்றி
நாகக் கச்சு நயப்பாய் போற்றி.

நிகமா கமஞ்சொலும் நேயா போற்றி
நீதி நெறியருள் நித்தா போற்றி
நுண்ணியர் தேடும் அண்ணால் போற்றி
நூலறி வறியா மேலவ போற்றி
நெக்குறு வார்பால் புக்கவ போற்றி

நேயம் பூண்டோர் தாயக போற்றி
நைந்துளம் நெகிழ்வோர் நட்பே போற்றி
நொய்யதின் நொய்ய நுண்மை போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய்தீர்த் தாளும் தாயே போற்றி
பக்குவர்க் கருளும் முக்கணா போற்றி.

பாதி மதியணி சோதி போற்றி
பின்பும் முன்பும் பேணுவை போற்றி
பீடு கொள் மூடிகம் நாடினை போற்றி
புலவர் நாவில் பொருந்துவாய் போற்றி
பூநா மகளிரைப் பொருத்துவாய் போற்றி.

பெண்ணாண் அலியென நண்ணுவாய் போற்றி
பேதைமை அகற்றும் நாதனே போற்றி
பைரவன் முன்வரும் பார்த்தீபன் போற்றி
பொய்கடிந் தாருளம் பொருந்துவாய் போற்றி
போதகற் செற்ற போதகம் போற்றி.

மருதங் குடிவளர் மாமணி போற்றி
மாதவர் சிந்தை வாழ்வாய் போற்றி
மின்னையொத் தொளிரும் மன்னவ போற்றி
மீகாம னாக விளங்குவை போற்றி
முன்னொன் றில்லா முதல்வா போற்றி.

மூவா தொளிரும் மூர்த்தி போற்றி
மெய்யர் காணும் மெய்யே போற்றி
மேதினி தழைக்க விளங்குவாய் போற்றி
மைவிழிச் சித்தியின் மணாள போற்றி
மொய்குழற் புத்திசேர் மூர்த்தி போற்றி.

மோதகம் தாங்கிய முன்னவ போற்றி
வளமெலாம் அருளும் வள்ளால் போற்றி
வாடா மலர்த்தாய் மைந்தா போற்றி
வியக்கும் திருவுரு மேவினை போற்றி
வீடுபே றளிக்கும் வித்தகா போற்றி.

வெள்ளிமால் வரையை விரும்புவாய் போற்றி
வேதமும் காணா விமலா போற்றி
வையகம் காண வந்தாய் போற்றி.

*திருச்சிற்றம்பலம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சிவபெருமான் போற்றிப் பஃறொடை

*திருச்சிற்றம்பலம்*

கன்னிநன் னாட்டுக் காவல போற்றி
கூடல் ஆலவாய்க் கோனே போற்றி
துவாத சாந்தச் சுடரே போற்றி
சத்தியாய்ச் சிவமாம் தனிப்பர போற்றி
சடைகரந் தொளிர்முடி தரித்தனை போற்றி

கொன்றை தணந்த கோமான் போற்றி
வேம்பு முடித்த விமலா போற்றி
நாகக் கலன்விடு நாயக போற்றி
மணிக்கலன் பூண்ட மன்னவ போற்றி
விடைக்கொடி விட்ட வேதிய போற்றி.

கயற்கொடி உயர்த்திய காவல போற்றி
வழுதி மகிழ்மரு மகனே போற்றி
கல்லால் அமர்ந்த கண்ணுதல் போற்றி
நால்வர்க் கறஞ்சொல் ஞானி போற்றி
கறைநி றுத்திய கந்தரன் போற்றி.

தெய்வ நாயகச் செல்வா போற்றி
வைகைத் திருநதி வாழ்வே போற்றி
திருக்கயி லாயத் தேவே போற்றி
மலயமா தவன்தொழும் வாழ்வே போற்றி
நெற்றித் திருக்கண் நிமலா போற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொற்றா மரைக்கரைப் புனிதா போற்றி
மதுரையம் பதியுறை வள்ளால் போற்றி
திருப்புன வாயிற் செல்வா போற்றி
குற்றா லப்பதிக் கோவே போற்றி
ஆப்பனூ ராளும் அரசே போற்றி.

ஏடகப் பதியில் இலங்குவாய் போற்றி
திருநெல் வேலித் தேனே போற்றி
இராமேச் சுரத்தில் இறைவா போற்றி
திருவா டானை ஒருவா போற்றி
தென் பரங் குன்றில் இன்பமே போற்றி.

சுழியற் பதியில் சுடரே போற்றி
திருப்புத் தூரில் விருப்பன் போற்றி
கானப் பேருறை கண்மணி போற்றி
திருக்கொடுங் குன்றத் திருப்பாய் போற்றி
பூவணத் துறையும் சேவல போற்றி

வாதவூர் மகிழும் நாதனே போற்றி
இந்திரன் பழிதவிர் எந்தாய் போற்றி
வெண்கயம் சாபம் விடுத்தனை போற்றி
சித்தராய் நகரம் தெரித்தனை போற்றி
தடாதகை மணங்கொள் தனிமுதல் போற்றி.

வெள்ளிமன் றாடிய விமல போற்றி
குறள்பசிந் தீதவிர் குன்றே போற்றி
அன்னம் வையையை அழைத்தனை போற்றி
எழுகடல் அழைத்த ஈசா போற்றி
அணிமலைத் துவசனை அழைத்தனை போற்றி.

உக்கிர குமரனை உதவினை போற்றி
வளைவேல் செண்டு வழங்கினை போற்றி
வாரிநீர் சுவறவேல் வைத்தனை போற்றி
புரந்தரன் முடிவளை போக்கினை போற்றி
மேருவிற் செண்டை விடுத்தனை போற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைப்பொருள் உணர்த்திய மாண்பு போற்றி
நன்மணி விலைபகர் நாயக போற்றி
நகர்வரு கடல்கெட நயந்தனை போற்றி
மாடம்நான் காக வகுத்தனை போற்றி
சித்தரா யிருந்தருள் செய்தனை போற்றி.

கல்லானை கரும்புணக் காட்டினை போற்றி
சமண்விடு யானையைச் சாய்த்தனை போற்றி
அருங்கிழம் காளைசேய் ஆயினை போற்றி
வலக்கால் எடுத்த மாநடம் போற்றி
பழியை வெளிசெய் பார்த்திப போற்றி

பெரும்பா தகம்தவிர் பித்தா போற்றி
தீங்குசெய் மாணவற் செற்றனை போற்றி
அமணவிடு நாகம் அழித்தனை போற்றி
அவர்விடும் கோட்டா அடக்கினை போற்றி
மெயக்காட் டிட்ட விகிர்தா போற்றி

உலவாக் கிழிதரும் உத்தம போற்றி
வளையல் விற்ற வாணிகம் போற்றி
அட்டமா சித்தி அருளினை போற்றி
விடைக்குறி இட்டருள் மேன்மை போற்றி
தண்ணீர் தந்த தயாநிதி போற்றி

இரச வாதம் இயற்றினை போற்றி
சோழனை மடுவில் தொலைத்தனை போற்றி
உலவாக் கோட்டை உதவினை போற்றி
மாமனா வழக்குரை சேமம் போற்றி
அருட்சிவ லோகம் தெருட்டினை போற்றி.

இந்தனம் விற்றருள் எந்தாய் போற்றி
செந்தமிழ்த் திருமுகம் தந்தனை போற்றி
பாண்மகிழ் பலகை காண்பொருள் போற்றி
இசைவாது வெல்ல இசைந்தனை போற்றி
ஏனம் முலையுண ஈந்தனை போற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்றியை அமைச்சாப் பதித்தனை போற்றி
கரிக்குரு விக்கருள் காட்டினை போற்றி
நாரைக்கு முத்தி நல்கினை போற்றி
ஆலவாய் ஆக்கிய அமுதே போற்றி
சுந்தரக் கணையெய் சுடரே போற்றி.

சங்கப் பலகை தந்தனை போற்றி
தருமிபொற் கிழிபெறச் சார்ந்தனை போற்றி
கீரனைக் கரையுறச் சேரருள் போற்றி
மற்றவற் கிலக்கணம் வழங்கினை போற்றி
சங்கத் தாரமர் தவிர்த்தனை போற்றி.

காடன் பிணக்கொழி கண்ணியம் போற்றி
மீன்வலை வீசிய கானவ போற்றி
வாதவூ ரர்க்கருள் வழங்கினை போற்றி
நரிபரி யாக்கிய நாயகா போற்றி
பரிநரி யாக்கிய பண்ணவ போற்றி.

மண்சுமந் தருளிய மாண்பு போற்றி
தென்னவன் சுரந்தவிர் சீர்த்தி போற்றி
அமண்கழு வேற்றிய அரசே போற்றி
கூபம் தருக்குறி கூட்டினை போற்றி
சச்சிதா னந்தத் தனிமுதல் போற்றி.

அயனரி அரனுக் காதி போற்றி
ஏற்றுக் குன்றில் இருந்தனை போற்றி
திங்கள் முடிக்கணி செல்வா போற்றி
மணம்பெற அருளும் மணியே போற்றி
மகப்பே றுதவும் வள்ளால் போற்றி

மெய்யர்க் கமுதாம் விருந்தே போற்றி
பொய்யர்க் கொளிக்கும் பொருளே போற்றி
எண்ணிய எண்ணியாங் கீவாய் போற்றி.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அம்மை போற்றிப் பஃறொடை

*திருச்சிற்றம்பலம்*

அகிலமும் ஈன்ற அன்னாய் போற்றி
அநாதியும் ஆதியும் ஆயினை போற்றி
அங்கயற் கண்ணி அமுதே போற்றி
அத்தனுக் கமைந்த அம்மை போற்றி
அன்பருள் வடிவாய் அமர்ந்தனை போற்றி.

ஆதி சத்தியாம் நீதி போற்றி
ஆதர வெவர்க்கும் ஆவாய் போற்றி
ஆகுலம் நீக்கும் அருளே போற்றி
ஆதி யரன்மகிழ் சோதி போற்றி
ஆரம் வேம்பினில் அணிந்தனை போற்றி.

இம்மையும் அம்மையும் ஈவாய் போற்றி
இருளென ஒளியென இருப்பாய் போற்றி
இருமையில் ஒருமை இசைந்தாய் போற்றி
இச்சா சத்தியாய் இருந்தாய் போற்றி
இனியவள் இனியெவள் எந்தாய் போற்றி.

ஈடும் எடுப்பும் இல்லாய் போற்றி
ஈசன் உமைமகிழ் இறைவி போற்றி
ஈவதை யன்றியொன் றில்லாய் போற்றி
ஈசன் தொழிலாய் இருப்பாய் போற்றி
ஈறும் முதலும் இல்லாய் போற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவமும் அருவரும் உள்ளாய் போற்றி
உருவரு வடிவமும் உகப்பாய் போற்றி
உருவங் கடந்தசிற் சொரூபமே போற்றி
உண்மையும் பொய்மையும் உணர்வாய் போற்றி
உலகனைத் தினுக்கும் ஒரு தாய் போற்றி.

ஊர்பேர் இலாத ஒன்றே போற்றி
ஊர்பேர் உறவரும் உமையே போற்றி
ஊதிய மாக ஒளிர்வாய் போற்றி
ஊனினும் உயிரிலும் ஒளிப்பாய் போற்றி
ஊகம் மிக்கவர் உளத்தாய் போற்றி.

எம்மையும் ஆண்ட இறைவி போற்றி
எனைத்தையும் உடைய எழுந்தினை போற்றி
எழில்மகத் தழலினில் எழுந்தனை போற்றி
எழுகடல் மதுரையில் இருத்தினை போற்றி
என்றும் நிலையாய் இலங்குவை போற்றி.

ஏழிசை யாகி இனிப்பாய் போற்றி
ஏற்றினில் உலாவர இசைவாய் போற்றி
ஏகமும் அநேகமும் ஏற்பாய் போற்றி
ஏதிலர் இலாத மாதுமை போற்றி
ஏகநா யகியென் றிருப்பாய் போற்றி.

ஐந்து நிறமுடை அழகே போற்றி
ஐந்தொழில் புரியும் ஆதி போற்றி
ஐந்தெழுத் தருளி ஆளுவை போற்றி
ஐந்து முகங்கொள் அணங்கே போற்றி
ஐந்துடன் ஐந்தில் அமர்வாய் போற்றி

ஒருவன் மகிழும் உமையே போற்றி
ஒக்கல் நட்பாய் உறுவாய் போற்றி
ஒடுக்கம் வழங்கும் ஒளியே போற்றி
ஒட்டலர் உளத்துக் கெட்டாய் போற்றி
ஒண்மையும் நுண்மையும் உடையாய் போற்றி.

ஓதுவார்க் கருளும் மாதே போற்றி
ஓங்காரி யாகிய ஓதிமம் போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்படை நிற்கும் சாம்பவி போற்றி
ஓரியைப் பரிசெய் உத்தமி போற்றி
ஓவியத் தடங்காப் பாவை போற்றி.

கன்னிநா டாளும் கற்பகம் போற்றி
கற்றவர்க் குற்ற நற்றுணை போற்றி
கருதுவார்க் காற்ற எளியாய் போற்றி
கண்ணுதல் மகிழும் பெண்மணி போற்றி
கரையில் கருணைக் கடலே போற்றி.

காஞ்சன மாலையின் கவின்மகள் போற்றி
காட்சிக் கமையாக் கயற்கணி போற்றி
காந்தட் கரமலர்க் கன்னி போற்றி
காபா லிகன்மகிழ் கனியே போற்றி
காமங் கடிந்தோன் காதலி போற்றி

கிரியா சத்திக் கிளியே போற்றி
கிஞ்சுகம் கைக்கொள் வஞ்சி போற்றி
கிருபா கரியென வருபவள் போற்றி
கிலேசம் தவிர்த்தருள் கிரிசை போற்றி
கின்னர மென்மொழி அன்னம் போற்றி.

கீழ்முகம் கொண்டருள் ஏழை போற்றி
கீற்று மதிமுடிக் கோற்றேன் போற்றி
கீரற் கருளிய நாரி போற்றி
கீதமும் வேதமும் ஓதினை போற்றி
கீர்த்தி அளக்கொணா மூர்த்தி போற்றி.

குற்றம் பொறுத்தருள் கோமளம் போற்றி
குணநிதி யாகிய மணியே போற்றி
குமரியாய் என்றும் குலவுவை போற்றி
குஞ்சித நிருத்தன் வஞ்சி போற்றி
குண்டலி சத்தியாம் ஒண்டொடி போற்றி.

கூடலிற் பதியைக் கூடினை போற்றி
கூச்சிர வனமுறும் குன்றே போற்றி
கூறரன் மேனியிற் கொண்டாய் போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூம்பரில் முகமலர்ச் சாம்பவி போற்றி
கூடற் கோமகன் குழந்தாய் போற்றி.

கெடுமதி கெடுக்கும் கெழுதகை போற்றி
கேள்வி கொடுத்தெமை ஆளுவை போற்றி
கொடியிடைக் கயல்விழிக் குமாரி போற்றி
கோணை தவிர்த்தருள் மாணிழை போற்றி
சண்முகச் சேயைத் தருதாய் போற்றி.

சாத்திரப் பொருளாச் சார்ந்தனை போற்றி
சின்மய மாகிய செல்வி போற்றி
சீகரம் வழங்கும் தேவி போற்றி
சுந்தரன் உளங்கவர் தந்திரி போற்றி
சூக்குமத் தப்பாற் சூக்குமை போற்றி.

செந்தமிழ் புரக்கும் சேயிழை போற்றி
சேதனா சேதனச் செல்வி போற்றி
சைவம் வளர்க்கும் தாயே போற்றி
சொல்வடி வான சோதி போற்றி
சோம தாரியின் வாமையே போற்றி.

ஞான சத்தியாய் நண்ணுவை போற்றி
தத்துவம் கடந்த தயாநிதி போற்றி
தானே தோன்றிய சங்கரி போற்றி
திருவருள் வடிவாய்த் திகழுவை போற்றி
தீவணன் தாயெனச் சிறப்பாய் போற்றி

துணையவன் மகளுமாய்த் துலங்குவை போற்றி
தூரியன் பரவுறும் தாரமே போற்றி
தென்றமிழ் நாடாள் சிவையே போற்றி.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முருகப் பெருமான் போற்றிப் பஃறொடை

*திருச்சிற்றம்பலம்*

சங்கரன் பெற்ற சண்முக போற்றி
ஐங்கரற் கிளைய அறுமுக போற்றி
அங்கயற் கண்ணிசேய் ஆயினை போற்றி
மூவிரு முகங்கொள் முன்னவ போற்றி
முகம்பொழி கருணை முதலே போற்றி.

ஈராறு தோளுடை ஏந்தல் போற்றி
சேவற் கொடிகொள் செல்வா போற்றி
மயின்மிசை யமர்ந்த வாழ்வே போற்றி
தேவர்கள் போற்றும் சேயே போற்றி
அருவமும் உருவமும் ஆனாய் போற்றி.

அருவமும் உருவமும் அல்லாய் போற்றி
திருப்பரங் குன்றமர் சேயே போற்றி
செந்திலம் பதியமர் கந்தனே போற்றி
ஆவினன் குடிவளர் அரசே போற்றி
ஏரகத் துறையும் எந்தாய் போற்றி.

குன்றுதோ றாடும் குமரா போற்றி
பழமுதிர் சோலைப் பரமா போற்றி
குமரகோட் டத்துறை அமரா போற்றி
திருத்தணி யிருந்தருள் கருத்தனே போற்றி
குன்றக் குடியுறை கோவே போற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகத்தியற் காசான் ஆவோய் போற்றி
சத்தி தரனாம் சாமியே போற்றி
கந்த சாமிக் கடவுள் போற்றி
தேவசே னாபதிச் செல்வா போற்றி
சுப்பிர மணியச் சுடரே போற்றி.

கயவா கனமுறுங் கற்பகம் போற்றி
சரவண பவகுக சண்முக போற்றி
கார்த்தி கேயக் கண்ணே போற்றி
குமாரக் கடவுள் கோலம் போற்றி
சண்முகக் கடவுள் சரணம் போற்றி.

தார காரி தளிரடி போற்றி
தேவ சேனைச் சிங்கம் போற்றி
பிரமசாத் தாவெனும் பெரும போற்றி
வள்ளி மணாள மன்னவ போற்றி
பால சுவாமிச் சீலனே போற்றி

கிரவுஞ்ச பேதனக் கேண்மையோய் போற்றி
சிகிவா கனத்துச் செம்மல் போற்றி
வில்வேல் ஏந்திய வேளே போற்றி
பங்கயன் முகுந்தனின் பரமே போற்றி
செக்கரஞ் சடைமுடிச் சிவன்சேய் போற்றி.

ஆதி நடுவீ றகன்றனை போற்றி
அருவமும் உருவமும் ஒருவினை போற்றி
ஒப்பும் ஏதுவும் ஒழிந்தனை போற்றி
போக்கும் வரவும் நீக்கினை போற்றி
இன்பமும் துன்பமும் இல்லாய் போற்றி.

வேதமும் கடந்த விமலா போற்றி
சிற்பரன் அறுநுதல் தீப்பொறி போற்றி
கங்கைவா னதியில் தங்கினை போற்றி
சரவணப் பொய்கைப் பரமனே போற்றி
பிரமச் சோதிப் பிழம்பே போற்றி.

கருணைகூர் அறுமுகக் கனியே போற்றி
பன்னிரு கரமுடைப் பண்ணவ போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுரு கப்பெயர்த் தேவே போற்றி
கார்த்திகை முலையுணும் கண்ணே போற்றி
உமைசிவன் நடுவண் உறுவாய் போற்றி

அரனுமை எழுத்தா றமைந்தனை போற்றி
சிவஞ்சத்தி யாகச் சிறந்தனை போற்றி
சிவத்திற் பேதமில் சேயே போற்றி
போதமும் வீடும் புணர்த்துவை போற்றி
விரிஞ்சனை மறைப்பொருள் வினவினை போற்றி.

பிரமனைக் குட்டிய பெரியோய் போற்றி
அயனைச் சிறைசெயும் அண்ணால் போற்றி
தாரகற் செற்றருள் சீரினை போற்றி
அரிமுகற் கொன்றருள் அத்தா போற்றி
சூர பன்மனைத் தொலைத்தோய் போற்றி.

அமரர்கள் துன்பம் அகற்றினை போற்றி
தகர்க்கடா இவரும் தனிமுதல் போற்றி
மூலத் தொல்பொருள் மொழிந்தோய் போற்றி
கந்தவெற் புறையும் எந்தாய் போற்றி
சுந்தர வல்லி சிந்தையாய் போற்றி.

அமுத வல்லியின் அகத்தாய் போற்றி
குமார புரிவரும் கொற்றவ போற்றி
சிவலிங் கார்ச்சனம் செய்தனை போற்றி
ஊர்குணம் குறிசெயல் ஒருவினை போற்றி
பேர்முன் பின்பிற சார்கிலாய் போற்றி.

உயிரினுள் கடவுளா யுள்ளாய் போற்றி
தளையுயிர் பதிநிலை சாற்றினை போற்றி
படைத்துக் காத்துத் துடைப்பாய் போற்றி
ஒளித்துப் பேரருள் உதவுவை போற்றி
பற்றிகல் இல்லாப் பரம போற்றி.

அறிவுக் கறிவாய் அருளுவை போற்றி
முன்னிலை யாயருள் மன்னுவை போற்றி
குருபரன் ஆகி மருவுவை போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறவி அறுக்கும் பிரானே போற்றி
சிவகதி வழங்கும் செல்வா போற்றி.

ஏகநா யகனாம் எந்தாய் போற்றி
அகரமும் மகரமும் ஆனாய் போற்றி
மூல காரண மூர்த்தி போற்றி
அழகொளி யிளமைசீர் அமைந்தனை போற்றி
உவமையில் வடிவம் உற்றனை போற்றி.

சூர்மருங் கறுத்த தூயவ போற்றி
செந்திலிற் பூசை செய்பவ போற்றி
தெய்வ யானையைச் சேர்ந்தனை போற்றி
அரியயன் இந்திரற் கருளினை போற்றி
விண்குடி ஏற்றிய வித்தக போற்றி.

கந்த வெற்புக் கடவுள் போற்றி
தினைப்புன வள்ளியைச் சேர்ந்தனை போற்றி
கச்சி யப்பரை மெச்சினை போற்றி
அருண கிரியார்க் கருளினை போற்றி
ஞானதண் டாயுத நாயக போற்றி.

திருச்செங் கோட்டிற் சேந்த போற்றி
சிக்கற் பதிவளர் தேவே போற்றி
பழநி மலையிற் பரமா போற்றி
விராலி மலையமர் வேந்தே போற்றி
உதய கிரியில் ஒருவா போற்றி.

அத்த மனகிரி அத்தா போற்றி
காடுங் காவும் கலந்தனை போற்றி
பீடுடைச் செந்தமிழ்ப் பிரானே போற்றி.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# தோத்திரங்கள்

திருச்சிற்றம்பலம்

## நால்வர் துதி

''பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிருநாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர் திருத்தாள் போற்றி''

# தேவாரம்

## முதல் திருமுறை

தோடு டையசெவி யன்விடை யேறியோர் தூவெண் மதிசூடிக்
காடு டையசுட லைப்பொடி பூசியென் னுள்ளங் கவர்கள்வ
னேடு டையமல ரான் முனை நாட்பணிந் தேத்த வருள்செய்த
பீடு டையபிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே.

## இரண்டாம் திருமுறை

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் றிருவால வாயான் றிருநீறே.

## மூன்றாம் திருமுறை

துஞ்சலுந் துஞ்சலி லாத போழ்தினு
நெஞ்சக நைந்து நினைமி னாடொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்
றஞ்ச வுதைத்தன வஞ்செ ழுத்துமே.

- *திருஞானசம்பந்த சுவாமிகள்*

## நான்காம் திருமுறை

கூற்றா யினவா றுவிலக் ககிலீர்
கொடுமை பலசெய் தனநா னறியே
னேற்றா யடிக்கே யிரவும் பகலும்
பிரியா துவணங் குவனெப் பொழுதுந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றா தென்வயிற் றினகம் படியே
　　குடரோ டுதுடக் கிமுடக் கியிட
வாற்றே னடியே னதிகைக் கெடில
　　வீரட் டானத் துறையம் மானே.

## ஐந்தாம் திருமுறை

ஏதும் ஒன்றும் அறிவில ராயினும்
ஓதி அஞ்செழுத் தும்முணர் வார்கட்குப்
பேதம் இன்றி அவரவர் உள்ளத்தே
மாதும் தாமும் மகிழ்வர்மாற் பேறரே.

## ஆறாம் திருமுறை

தில்லைச்சிற் றம்பலமுஞ் செம்பொன்பள்ளி
　　தேவன் குடிசிராப் பள்ளிதெங்கூர்
கொல்லிக் குளிரறைப் பள்ளிகோவல்
　　வீரட்டங் கோகரணங் கோடிகாவு
முல்லைப் புறவ முருகன் பூண்டி
　　முழையூர் பழையாறை சத்திமுற்றங்
கல்லிற் றிகழ்சீரார் காளத்தியுங்
　　கயிலாய நாதனையே காணலாமே.

*- திருநாவுக்கரசு சுவாமிகள்*

## ஏழாம் திருமுறை

பித்தாபிறை சூடிபெரு மானேயரு ளாளா
வெத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையு
ளத்தாவுனக் காளாயினி யல்லேனென லாமே.

*- சுந்தரமூர்த்தி சுவாமிகள்*

## திருவாசகம் - எட்டாம் திருமுறை

மெய்தா னரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார் கழற்கென்
கைதான் றலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் றவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றியென்னுங்
கைதா னெகிழ விடேனுடை யாயென்னைக் கண்டுகொள்ளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோவையார் - எட்டாம் திருமுறை

திருவளர் தாமரை சீர்வளர் காவிகள்ஈசர் தில்லைக்
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங்காந்தள் கொண்டோங்குதெய்வ
மருவளர் மாலையொர் வல்லியின்-ஒல்கி அன நடைவாய்ந்
துருவளர் காமன்றன் வென்றிக் கொடிபோன் றொளிர்கின்றதே.

*- மாணிக்கவாசக சுவாமிகள்*

## திருவிசைப்பா - ஒன்பதாம் திருமுறை

ஒளிவளர் விளக்கே யுலப்பிலா வொன்றே
யுணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரண்மணிக் குன்றே
சித்தத்துட் டித்திக்குந் தேனே
யளிவள ருள்ளத் தானந்தக் கனியே
யம்பல மாடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

*- திருமாளிகைத்தேவர்*

## திருப்பல்லாண்டு - ஒன்பதாம் திருமுறை

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள் வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து புவனியெல் லாம்விளங்க
வன்ன நடைமட வாளுமை கோனடி யோமுக் கருள்புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

*- சேந்தனார்*

## திருமந்திரம் - பத்தாம் திருமுறை

சிவனோ டொக்குந்தெய்வந் தேடினு மில்லை
யவனோ டொப்பாரிங் கியாவரு மில்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவனச் சடைமுடித் தாமரை யானே.

*- திருமூலதேவ நாயனார்*

## பதினோராம் திருமுறை

பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தே -னிறந்திகழு
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
யெஞ்ஞான்று தீர்ப்ப திடர்.

*- காரைக்கால் அம்மையார்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருத்தொண்டர் புராணம் - பன்னிரண்டாம் திருமுறை

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவ
னிலவு லாவிய நீர்மலி வேணிய
னலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

*- சேக்கிழார் சுவாமிகள்*

## அம்மையார் துதி

பரந்தெழுந்த சமண்முதலாம் பரசமய இருள்நீங்கச்
சிரந்தழுவு சைவநெறித் திருநீற்றின் ஒளிவிளங்க
அரந்தைகெடப் புகலியர்கோன் அமுதுசெயத் திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாம சுந்தரிபூங் கழல்போற்றி.

*- உமாபதிசிவம்*

## விநாயகர் துதி

கல்லால் நிழல்மலை, வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர், நல்லார் புனைவரே.

*- மெய்கண்டசிவம்*

## முருகப்பெருமான் துதி

புன்னெறி யதனிற் செல்லும் போக்கினை விலக்கி மேலாம்
நன்னெறி யொழுகச் செய்து நவையறு காட்சி நல்கி
என்னையு மடிய னாக்கி இருவினை நீக்கி ஆண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங் கயங்கள் போற்றி.

*- கச்சியப்ப சிவாசாரியர்*

## வாழ்த்து

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயது; எல்லாம் அரன் நாமமே
சூழ்க; வையக மும் துயர் தீர்கவே.

*- தேவாரம் - திருஞானசம்பந்தர்*

மழைவ ழங்குக; மன்னவன் ஓங்குக;
பிழையில் பல்வளம் எங்கும் பெருகுக;
தழைக அஞ்செழுத்(து) ஓசை தரையெலாம்
பழைய வைதிக சைவம் பரக்கவே.

*- கோயிற்புராணம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழி சோபனம்; வாழிநல் லன்பர்கள்;
சூழ வந்தருள் தோற்றமுஞ் சோபனம்;
ஆழி போலருள் ஐயன் மவுனத்தால்
ஏழை யேன்பெற்ற இன்பமுஞ் சோபனம்.

*- தாயுமானசுவாமிகள் பாடல்*

கல்லாப் பிழையும் கருதாப் பிழையும் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும்நின் அஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையும் துதியாப் பிழையும்தொ ழாப்பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள் வாய்கச்சி யேகம்பனே.

சொல்லால் வருங்குற்றம் சிந்தனை யால்வருந் தோடம்செய்த
பொல்லாத தீவினை பார்வையிற் பாவங்கள் புண்ணியநூல்
அல்லாத கேள்வியைக் கேட்டிடும் தீங்குகள் ஆயவுமற்(று)
எல்லாப் பிழையும் பொறுத்தருள் வாய்கச்சி யேகம்பனே.

*- பட்டினத்தார் பாடல்கள்*

ஆறிரு நடந்தோள் வாழ்க; அறுமுகம் வாழ்க; வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க; குக்குடம் வாழ்க; செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க; யானை தன் அணங்கு வாழ்க;
மாறிலா வள்ளி வாழ்க; வாழ்கசீர் அடியார் எல்லாம்.

வான்முகில் வழாது பெய்க; மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க; குறைவிலா(து) உயிர்கள் வாழ்க;
நான்மறை அறங்கள் ஓங்க; நற்றவம் வேள்வி மல்க;
மேன்மைகொள் சைவநீதி விளங்குக; உலகமெல்லாம்.

*- கந்தபுராணம்*

## சிவநாமாவளி

ஓம் நமசிவாய சிவாயநம ஓம்
ஓம் நமசிவாய சிவாயநம ஓம்
ஓம் நமசிவாய சிவாயநம ஓம்
ஓம் நமசிவாய சிவாயநம ஓம் 1

சிவாயநம ஓம் சிவாயநம ஓம்
சிவாயநம ஓம் சிவாயநம ஓம்
சிவாயநம ஓம் சிவாயநம ஓம் 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சிவாயநம ஓம் நமசிவாய
ஓம் சிவாயநம ஓம் நமசிவாய
ஓம் சிவாயநம ஓம் நமசிவாய 3

சிவாயநம ஓம் பவாயநம ஓம்
சிவாயநம ஓம் பவாயநம ஓம்
சிவாயநம ஓம் பவாயநம ஓம் 4

ஓம் நமசிவாய பவாயநம ஓம்
ஓம் நமசிவாய பவாயநம ஓம்
ஓம் நமசிவாய பவாயநம ஓம் 5

சிவ சிவ சிவ சிவ சிவாயநம ஓம்
சிவ சிவ சிவ சிவ சிவாயநம ஓம்
சிவ சிவ சிவ சிவ சிவாயநம ஓம் 6

## வாழ்த்தொலி - மகுடம்

ஏகம் பத்துறை எந்தாய்! போற்றி!
பாகம் பெண்ணுரு ஆனாய் போற்றி! 1

அண்ணா மலையெம் அண்ணா! போற்றி!
கண்ணார் அமுதக் கடலே! போற்றி! 2

பராய்த்துறை மேவிய பரனே! போற்றி!
சிராப்பள்ளி மேவிய சிவனே! போற்றி! 3

ஆடக மதுரை அரசே! போற்றி!
கூடல் இலங்கு குருமணி போற்றி! 4

தென்னா டுடைய சிவனே! போற்றி!
எந் நாட்ட வர்க்கும் இறைவா! போற்றி! 5

நமப் பார்வதீ பதியே! ஹரஹர மகா தேவ!
சிற்சபேசா! சிவ சிதம்பரம்! திருச்சிற்றம்பலம்! 6

ஸ்ரீ வள்ளி தேவசேனா காந்தஸ்மரணே!
சுப்ரமண்ய ஓம்! சுப்ரமண்ய ஓம்! சுப்ரமண்ய ஓம்!! 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சண்டேசுரர் துதி

தழைத்ததோர் ஆத்தி யின்கீழ்த் தாபர மணலாற் கூப்பி
அழைத்தங்கே ஆவின் பாலைக் கறந்துகொண் டாட்டக் கண்டு
பிழைத்ததன் தாதை தாளைப் பெருங்கொண்டு மழுவால் வீசக்
குழைத்ததோர் அமுதம் ஈந்தார் குறுக்கைவீ ரட்டனாரே.

நிறைந்தமா மணலைக் கூப்பி நேசமோ(டு) ஆவின் பாலைக்
கறந்துகொண்(டு) ஆட்டக் கண்டு கருத்ததன் தாதை தாளை
எறிந்தமா ணிக்குஅப் போதே எழில்கொள்**சண் டீசன்** என்னச்
சிறந்தபேர் அளித்தார் சேறைச் செந்நெறிச் செல்வ னாரே.


*- திருநாவுக்கரசர்*

தாதையைத் தாளற வீசிய **சண்டிக்(கு)** இவ்
வண்டத்தொடு முடனே
பூதலத் தோரும் வணங்கப்பொற் கோயிலும்
போனகமும் அருளிச்
சோதி மணிமுடித் தாமமும் நாமமும்
தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. *- திருப்பல்லாண்டு*

அண்டர் பிரானுந் தொண்டர்தமக்கு
அதிப னாக்கி அனைத்தும்நாம்
உண்ட கலமும் உடுப்பனவும்
சூடு வனவும் உனக்காகச்
**சண்டீ சனு**மாம் பதம்தந்தோம்
என்றங்(கு) அவர்பொற் றடமுடிக்குத்
துண்டமதி சேர்சடைக் கொன்றை
மாலை வாங்கிச் சூட்டினார். *- பெரியபுராணம்*

பொன்னங் கடுக்கை முடிவேய்ந்த புனிதற்(கு)
அமைக்கும் பொருளன்றி
மின்னுங் கலன்ஆ டைகள்பிறவும் வேறு
தனக்கென்(று) அமையாமே
மன்னுந் தலைவன் பூசனையின் மல்கும்
பயனை அடியார்கள்
துன்னும் படிபூ சனைகொள்ளும் தூயோன்
அடித்தா மரைதொழுவாம். -திருவானைக்காப் புராணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நன்றுடையானைத் தீயதிலானை நரை வெள்ளேறு
ஒன்றுடையானை உமையொரு பாகம் உடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் **சிராப்பள்ளி**
குன்றுடையானைக் கூறஎன் னுள்ளங் குளிரும்மே.

*- திருஞானசம்பந்தர்*

மட்டு வார்குழ லாளொடு மால்விடை
இட்ட மாவுகந் தேறும் இறைவனார்
கட்டு நீத்தவர்க் கின்னரு ளேசெயும்
சிட்டர் போலுஞ் **சிராப்பள்ளிச்** செல்வரே.

*- திருநாவுக்கரசர்*


தேங்கூர் ருந்திருச் சிற்றம்பலமுஞ் **சிராப்பள்ளி**
பாங்கூர் எங்கள் பிரானுறை யுங்கடம் பந்துறை
பூங்கூ ரும்பர மன்பரஞ் சோதி பயிலுமூர்
நாங்கூர் நாட்டுநாங் கூர்நறை யூர்நாட்டு நறையூரே.

*- சுந்தரர்*

நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனைப்
பேயேன துள்ளப் பிழைபொறுக்கும் பெருமையனைச்
சீயேதும் இல்லாதென் செய்பணிகள் கொண்டருளுந்
**தாயான ஈசற்கே** சென்றூதாய் கோத்தும்பீ.

*- மாணிக்கவாசகர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாயுமானவர்சுவாமி திருக்கோயில்,
## மலைக்கோட்டை, திருச்சிராப்பள்ளி.



அருள்மிகு தாயுமானசுவாமி



அருள்மிகு மட்டுவார்குழலம்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org